දුරකථන
தொலைபேசி
Tel. 011 2446183 - 4

ලේකම්
செயலாளர்
Secretary 011 2327060

ෆැක්ස්
தொலைநகல்
Fax 011 2320140

ධීවර, ජලජ හා සාගර සම්පත් අමාත්‍යාංශය

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு

Ministry of Fisheries, Aquatic and Ocean Resources

විද්‍යුත් තැපැල
மின்னஞ்சல்
E-mail secfisherieslk@gmail.com

මගේ අංකය
எனது இல
My Number

ඔබේ අංකය
உமது இல
Your Number

දිනය
திகதி
Date 2026.09.24

## இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தை பிற்போடப்பட்டுள்ளது - புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தை 25.09.2026 அன்று இந்தியாவில் நடைபெறவிருந்த நிலையில், இந்தியத் தரப்பில் ஏற்பட்ட தவிர்க்க முடியாத காரணங்களினால் குறித்த பேச்சுவார்த்தை பிற்போடப்பட்டுள்ளதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபடுவது, அவ்வாறு இலங்கை கடற்பரப்பிற்குள் நுழையும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவது உள்ளிட்ட நீண்டகாலமாக நிலவி வரும் மீனவர் பிரச்சினைகள் தொடர்பில் இரு தரப்பினரும் கலந்துரையாடுவதற்காக இந்தப் பேச்சுவார்த்தை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும், இந்தியத் தரப்பில் ஏற்பட்ட தவிர்க்க முடியாத காரணங்களினால் திட்டமிடப்பட்டிருந்த பேச்சுவார்த்தையை குறித்த காலப்பகுதியில் நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இந்தியத் தரப்பினால் இலங்கைத் தரப்பிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பேச்சுவார்த்தையை நடத்துவதற்கான புதிய திகதி இந்தியத் தரப்பினால் பின்னர் அறிவிக்கப்படும் எனவும், புதிய திகதி தொடர்பான அறிவிப்பு கிடைத்தவுடன் அதற்கமைய அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், பேச்சுவார்த்தையில் பங்கேற்கவுள்ள இலங்கைத் தரப்பு பிரதிநிதிகள் குழுவின் விபரங்களை இந்திய உயர்ஸ்தானிகராலயத்துடன் பகிர்ந்து கொள்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, குறித்த பேச்சுவார்த்தை இலங்கைத் தரப்பினால் இரத்து செய்யப்படவில்லை என்றும், இந்தியத் தரப்பில் ஏற்பட்ட தவிர்க்க முடியாத காரணங்களினாலேயே பேச்சுவார்த்தை பிற்போடப்பட்டுள்ளதாகவும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சு மேலும் தெளிவுபடுத்தியுள்ளது.

**க.கிஷாந்தன்**
**ஊடகச் செயலாளர்**
**கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சு**